**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 14.10.2024</u>**

**OS.224/2019**

**வா.சா.1, சிகாமணி ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

தாவா சொத்தின் சர்வே எண். 137/8 ஆகும். தாவா சொத்து கிருஷ்ணமூர்த்திக்கு பாத்தியப்பட்டது. கிருஷ்ணமூர்த்தி, சம்பத் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றார். தாவா சொத்து கிருஷ்ணமூர்த்திக்கு முன்பாக சம்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவ்ணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து சம்பத் என்பவருக்கோ அல்லது கிருஷ்ணமூர்த்திக்கோ பாத்தியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதன் காரணமாக சம்பத்திற்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்களை நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. கூட்டு சிட்டா சம்பத் பேரில் ஒப்படைத்திருக்கிறேன். சம்பத் பேரில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் ஏதும் என்னிடம் இல்லை கிருஷ்ணமூர்த்தியிடம் இருக்கும். நான் கிரையம் பெறும் போது கிருஷ்ணமூர்த்தியிடம் சம்பத் கிரையம் செய்த பத்திரத்தை காண்பிக்குமாறு கேட்டு பார்த்தேனா என்றால் இல்லை. சம்பத்திற்கு பாத்தியம் இல்லாத சொத்தை கிருஷ்ணமூர்த்தி பேரில் பொய்யாக கிரையம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ. 5, 6 மற்றும் 7 ஆவணங்கள் மூன்றும் தாவா சொத்தையும் அதற்கு தெற்கில் உள்ள சொத்தை சம்பத் வகையறாவிடம் இருந்து கிரையம் பெற்றதாக கிரைய பத்திரத்தை ஒப்படைத்துள்ளேன் என்றால் சரி. வா.சா.ஆ.5 தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்ட ஆவணம் இல்லை. வா.சா.ஆ.6 குன்னாபாய் நிலத்திற்கு கிழக்கு, என்னுடைய மீதி நிலத்திற்கு மேற்கு என்றால் அவ்வாறு இல்லை சம்பத் நிலத்திற்கு மேற்கு என்று உள்ளதா என்றால் நான் கவனிக்கவில்லை. வா.சா.ஆ.7 எந்த வகையில் தாவா சொத்திற்கு சம்மந்தப்பட்டது என்றால் தாவாவிற்கு 2 சர்வே எண்கள் உள்ளது அதில் ஒன்றுக்கானது வா.சா.ஆ.7 ஆகும். வா.சா.ஆ.7 தாவா சொத்திற்கு சம்பந்தப்பட்டது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

Sd/–S.ASSEEN BANU,
Sub Judge, Harur